# யா/ மகாஜனக்கல்லூரி

# நிறுவியர் நினைவு தின உரை

# 2017

வைத்திய நிபுணர் சீனியர். நவரத்தினம்
(MBBS, DCH, MRPC, D. Phys MED (London))
**Consultant Rheumatologist**
**(Royal Free Hospital, Medical School)**
**Examiner – MBBS, London University**
(மகாஜனன், பழைய மாணவர் சங்கம் - லண்டன்)

24.06.2017

# சமகால கல்வியின் நிலை

ஈழத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் அங்காங்கே சில அகல் விளக்குகள் ஆரவாரம் இல்லாமல் வெளிச்ச விழுதுகளை இறக்குகின்றன. இந்த வெளிச்ச விழுதுகளில் ஒருவர் தான் அமரர் துரையப்பாப்பிள்ளை. 1910ம் ஆண்டு தெல்லிப்பளைக் கிராமத்தில் அவர் ஆரம்பித்த சைவத்தமிழ் பாடசாலை வளர்ச்சி பெற்று மகாஜனக் கல்லூரியாக மாறியபோது, 10 வயதுச் சிறுவனாக அப்பாடசாலையில் சேர்ந்தேன். அமரர் துரையப்பாப்பிள்ளையின் மகன் 'நவமகாஜன சிற்பி' என்று அழைக்கப்படும் அமரர் தெ.து.ஜயரத்தினம் அதிபராகக் கடமையாற்றினார்.

இலங்கை முழுவதும் சிறந்த பாடசாலையாகத் திகழ்ந்த மகாஜனக் கல்லூரியில் கல்வி கற்று, இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வைத்திய கல்லூரிக்குச் சிறப்புத் தேர்வு பெற்று டாக்டர் ஆனேன். யாழ்ப்பாணத்தில் சிலகாலம் சேவையாற்றிய பின்னர் லண்டன் சென்றேன். பிரித்தானியாவில் சிறந்த சிரேஷ்ட வைத்திய நிபுணராகவும், அங்குள்ள ஒரு சிறந்த வைத்தியக் கல்லூரிக்கு ஆலோசகராகவும், இன்றும் பணியாற்றுவதற்கு முக்கிய காரணம் மகாஜனக்கல்லூரி தான் என்பதைச் சொல்லிக்கொள்வதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். மகாஜனாவில் ஏறக்குறைய 9 வருடங்கள் கல்வி கற்றதைப் பெரும் பாக்கியமாகக் கருதுகின்றேன்.

1949ம் ஆண்டில் இருந்து 1958ம் ஆண்டு வரை இந்தப் பாடசாலை எனக்குக் கல்வியை மட்டும் அல்லாமல் ஆன்மீகம், பழக்கவழக்கங்கள், ஒழுக்கம், உடற்பயிற்சி, உளப்பயிற்சி, தன்னம்பிகை போன்றவற்றையும் கற்றுக்கொடுத்து முழுமையான மனிதனாகத் திகழ வைத்தது.

பிரித்தானியாவில் வாழும் மகாஜனாவின் பிள்ளைகள் ஒன்று சேர்ந்து, 1987ம் ஆண்டு மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கத்தை ஆரம்பித்தோம். அதன் ஆரம்பத் தலைவராக சில வருடங்கள் இருந்து, இன்றுவரை போசகராகக் கடமையாற்றுகின்றேன். இந்த மேடையில் இருக்கின்ற எனக்கு

அந்தக் காலத்தில், இதே பரிசளிப்பு விழாவில் வருடா வருடம் பல பரிசில்கள் பெற்ற பசுமையான நினைவுகள் மறக்காமல் மனதோடு பதிந்திருக்கின்றன.

## கல்வி

கல்வி என்பது ஒருவருடைய தலைக்குள் பல விடயங்களைப் புகுத்துவது அல்ல. கிரேக்க தத்துவ ஞானி பிளேட்டோ கூறினார். 'மனிதராகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் கல்வி அவர்களது பிறப்புரிமை.' 2000 ஆண்டுகளுக்கு முன்பே திருவள்ளுவர் கல்வி எப்படிப் போதிக்கப்பட வேண்டும் என்பதை விளக்கமாகக் கூறி இருக்கின்றார். கணிதமும், மானிடவியலும் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டும் எனக்கூறியுள்ளார். இங்கு கணிதம் - விஞ்ஞானப்பாடங்களின் முன்னோடியாகும். மானிடவியல் - மொழி, அரசியல், வரலாறு, தர்க்கம், முகாமைத்துவம், வணிகம் போன்ற பாடங்களாகும்.

மேற்படிப்புக்குப் போகும் வரை கணிதமும், மானிடவியலும் எல்லா மாணவர்களுக்கும் போதிக்கப்பட வேண்டும். இவைகள் அனைத்தையும் மாணவர்களின் தரம் அறிந்து அவர்களை ஊக்குவித்துச் சரியான முறையில் போதிப்பது ஆசிரியர்களின் முக்கியமான கடமையாகும். இதனையே திருவள்ளுவர், மிக அழகாக

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு" எனவும்,

தமிழ் மூதாட்டி ஒளவையார்,
"எண்ணும் எழுத்தும் கண் எனத்தகும்" எனவும்
கூறியுள்ளனர்.

## கருவில் உருவாகும் வளர்ச்சி

ஒரு குழந்தையின் அறிவு வளர்ச்சி, தாயின் வயிற்றில் கருவாக உருவாகும் பொழுதே ஆரம்பித்து விடுகிறது. இந்த உண்மையை ஆய்வின் மூலம் நிபுணர்கள் கண்டு அறிந்துள்ளார்கள். உடம்பில் உள்ள பல பாகங்களில் கல்விக்குரிய உயிர் அணுக்கள் 'மூளை' என்று

அழைக்கப்படும் பகுதியில் செயற்படுகின்றன. இந்த உயிர் அணுக்களின் செயற்பாடு 'Genes' என்ற மரபு அணுக்களால் தொகுக்கப்பட்டு பிரணமிக்கின்றது. கருவில் குழந்தை வளரும் பொழுது கர்ப்பிணியின் 3வது மாதத்திலிருந்து அந்த தாயின் உணர்ச்சிகளையும், தாய் பேசும், பாடும், சொற்களுக்கு ஏற்ற அசைவுகள் அந்தக் கருவில் காணப்படுவதை நவீன ஆராய்ச்சி மூலம் காணக்கூடியதாக இருக்கின்றது.

தாய் கேட்கும் இசை மற்றும் பேசப்படுகின்ற சொற்கள், சுற்றாடலில் இருக்கும் ஒலி, ஒளி முதலியவற்றை வளர்ச்சி அடையும் குழந்தை உணர்ந்து கொள்வதை ஆராய்ச்சி மூலம் வெளிப்படுத்தி இருக்கின்றார்கள். இந்தக் கருத்தைத்தான் மகாபாரதத்தில் அபிமன்யு கருவில் இருக்கும் பொழுதே, தனது தந்தையான அர்ச்சுனன், தனது தாயான சுபத்திரைக்கு யுத்தத்தின் சில நுட்பங்களை எடுத்துக் கூறும்பொழுது கேட்டறிந்திருந்தமையால், பாரத யுத்தத்தில் கௌரவர் உருவாக்கிய சக்கரத்தை உடைத்து உட்செல்லும் யுக்தியை அபிமன்யு பயன்படுத்தினார் என்பது சரித்திரம். இதை நான் இத்தருணத்தில் ஏன் கூறுகின்றேன் என்றால் கர்ப்பிணியாக இருக்கும் பெண்கள் கருவில் இருக்கும் குழந்தைக்கு நல்ல விதமான பதிப்புக்கள் ஏற்படும் வகையில் பழக்கவழக்கங்கள், உணவுப்பொருட்களை உண்பதும் இளைப்பாறுவதும், அதிர்ச்சியான செய்திகளைத் தவிர்த்தும், போதைப்பொருள்களைத் தவிர்த்தும், பக்தி, அமைதியான வாழ்க்கை முதலியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும். இவை அனைத்தும் அந்த கரு நல்ல முறையில் வளர்ச்சியடைந்து ஒரு சிறந்த குழந்தையாக பிறப்பதற்கு ஏதுவாக இருக்கும்.

பிறந்து ஆரம்ப காலத்தில் தாய், தந்தை, சகோதரர்கள் மற்றும் சுற்றாடலில் உள்ளவர்களுடைய செயற்பாடுகளினால் வளர்ச்சி பெற்று 1வது வயது தொடக்கம் சொற்களை உச்சரிக்கும் வல்லமை பெறுகின்றது. 2வது வயதில் சிறுசிறு வசனங்களையும் சொல்கின்றது. 3 வயதில் பாலர் பாடசாலை செல்வதற்கு முன் வீட்டுச்சூழலில் கல்வி தொடங்குகின்றது. 4 வயதில் பாலர் பாடசாலைக்குச் செல்லும் குழந்தை தொடர்ந்து கல்விக்கூடங்களுக்கு கல்வி பயிலச் செல்கின்றது.

ஆரம்பகாலம் தொட்டு தமது பாரம்பரிய தாய்மொழியைப் பேசி மற்றவர்களுடன் தொடர்புகொண்டு தமது

எண்ணங்களையும் தேவைகளையும் பரிமாறிக்கொள்ள முடிகின்றது. கற்றோர் ஒரு விடயத்தை நல்லவிதமாக அழுத்தம், திருத்தமாக மற்றோர் விளங்கிக்கொள்ளும் விதத்தில் கூறுவதை நாம் காண்கின்றோம். இதையே வள்ளுவர்,

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்" என்று கூறியுள்ளார்.

சமகாலக் கல்வியில் 21ம் நூற்றாண்டிற்கு ஏற்ப ஆன்மீகம், மொழி, சரித்திரம், பூமி சாஸ்திரம், விஞ்ஞானம், வர்த்தகம், கணணி உபயோகம் ஆகியன எல்லாம் உள்ளடக்கி ஒரு முழுமையான கல்வியாக அமைய வேண்டும். பிள்ளைகளின் மொழி, கலாசார, சமூக அறிவு வளர்ச்சியில் பெற்றோர், சுற்றத்தார் எல்லோரும் ஆசிரியர்களுடன் இணைந்து செயற்படவேண்டும். நல்லொழுக்கம் மிகவும் முக்கியமானது.

இந்த விடயத்தில் நாம் வளர்ந்து வரும் இளைஞர்களுக்குத் தற்கால நிலைக்கு ஏற்ப போதனைகளும் பயிற்சிகளும் கொடுக்க வேண்டும். மற்றவர்களுடைய உரிமையைப் பேணியும், செய்யத்தகாத விடயங்களைச் செய்யாமல் இருக்கவும் எமது கல்வி வழிவகுக்க வேண்டும். புகையிலை, மது, அபின், கஞ்சா முதலியவற்றைப் பாவிப்பதால் ஏற்படும் கெடுதிகள் என்பவற்றை மாணவர்களுக்கு போதிப்பது மிகவும் அவசியம். வன்முறையைத் தவிர்க்கக்கூடிய கல்வி புகட்ட வேண்டும். சமூக உணர்வையும், ஆன்மீக உணர்வையும் மேம்படுத்த கல்வி உணர்த்த வேண்டும்.

## முத்தமிழ் பயிற்சி

பாடசாலையில் இயல், இசை, நாடகம் என்ற விடயத்திற்கு மாணவர்களுக்கு முக்கிய இடம் கொடுத்து, அவரவர் ஆர்வத்திற்கு தகுந்தபடி எழுத்துக்கலை, பேச்சுகலை, நாடகக்கலை, இசைக்கலை முதலியவற்றில் மேம்படுவதற்கு பாடசாலை வழிவகுக்க வேண்டும்.

## மும்மொழிப் பயிற்சி

எமது நாட்டில் எல்லாப் பிள்ளைகளும் மும்மொழித் தேர்ச்சி பெறவேண்டும் என்பது முக்கியம். தமிழ் பிள்ளைகள் ஆகிய நாம் இளம் வயதில் இருந்து தமிழைக் கற்று பாடசாலைப் படிப்பு முடியும்பொழுது தமிழில் சிறந்த தேர்ச்சி பெற்று இருக்க வேண்டும் என்பது எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்படும். ஆரம்பக்கல்வி முடித்து உயர்கல்விக்குச் செல்லும்பொழுது எமது பிள்ளைகள் ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகவும், சிங்களத்தை மூன்றாவது மொழியாகவும் கற்றுத் தேர்ச்சி அடைய வழிவகுக்க வேண்டும்.

ஆங்கிலம் உலக மொழிகளில் ஒன்றாகவும், இலங்கையில் பல இனத்தவரும் விரும்பிப் படிக்கும் மொழியாகவும் இருப்பதால் அந்த மொழி எமது பாடசாலைகளில் கற்பிக்க வேண்டியது அவசியம். ஆங்கில மொழியில் மிகச்சிறந்த புனைகதை நூல்களும், பலவித இலக்கிய நூல்களும், விஞ்ஞான நூல்களும் இருப்பதால் அந்த மொழியைக் கற்பதால் எமது மக்கள் கல்வியில் நல்ல முன்னேற்றம் அடைய ஏதுவாக இருக்கும். சிங்கள மொழி எமது நாட்டில் பெரும்பாலானோர் பேசும் மொழி. அரச மொழியாகப் பயன்படுத்தப்படும் மொழி. தமிழ் மொழியும் அரச மொழியாக இருந்தாலும் இரு இனத்தவர்களும் இரண்டு மொழியையும் கற்றுத் தேர்ச்சி பெறுவது நாட்டின் ஒற்றுமைக்கு வழிவகுக்கும். நாம் எமது அபிப்பிராயங்களை சாதாரணமான சிங்கள மக்களுக்கு எடுத்துச் செல்ல சிங்கள மொழித்தேர்ச்சி உதவும். எமது பாடசாலைகளில் மும்மொழித்தேர்ச்சி இருக்க வேண்டும்.

உயர்தர வகுப்பில் அவரவர் ஆற்றலையும், நாட்டத்தையும் கணித்து மாணவர்களைக் கலைப்பிரிவாகவும், விஞ்ஞானப் பிரிவாகவும், தொழில்நுட்பப்பிரிவாகவும் பிரித்து, கல்வி கற்பித்தல் நல்ல பெறுபேற்றைக் கொடுக்கும். பாடசாலைப்படிப்பு முடிந்ததும் பல்கலைக்கழகங்களுக்கும், தொழில்நுட்பக்கல்வி நிறுவனங்களுக்கும், வேறு பல துறைகளிலும் மாணவர்கள் தமது திறமைக்கேற்ப செல்வார்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு மாணவர்களின் கடின உழைப்பும், ஆசிரியர்களின் சுயநலமற்ற அர்ப்பணிப்பும் மிகவும் அவசியமாகும்.

## ஆன்மீகக்கல்வி

மாணவர்களின் சிறு பராயத்தில் இருந்து ஆன்மீகக்கல்வி ஒரு அம்சமாக இருக்க வேண்டும். பாடசாலைக்குப் போக முன்பே பிள்ளைகளின் ஆன்மீக வளர்ச்சி அவர்களின் பெற்றோர் கையிலும் சுற்றத்தவர் கையிலும் தங்கிருப்பதை நாம் அறிவோம். அறநெறிப் பாடசாலைகள் மூலமாகவும் பாடசாலையின் பாடத்திட்டம் மூலமாகவும் ஆன்மீக வழிகாட்டல் நடைபெற வேண்டும். மாணவர்களுடையே ஒழுக்கம் ஒரு முக்கியமான அங்கம். ஆன்மீகத்தோடுப் பின்னிப்பிணைந்து இருப்பது நல்ல ஒழுக்கம். இதனைத்தான் திருவள்ளுவர்.

“ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்”

## ஆரோக்கியமான வாழ்விற்கு உடற்பயிற்சி

மூளை வளர்ச்சிக்கு அறிவு எப்படியோ அதே போல் ஆரோக்கியமான வாழ்விற்கு உடற்பயிற்சி அவசியம். எனவே உடற்பயிற்சிக்கு நேரம் ஒதுக்கப்படல் வேண்டும். ஓடுதல், பாய்தல் போன்றவற்றிலும் குழுவாகச் செயற்படக்கூடிய கிளித்தட்டு, உதைப்பந்தாட்டம், துடுப்பாட்டம், வலைப்பந்தாட்டம் போன்ற விளையாட்டுக்களிலும் மாணவர்கள் பங்குபற்ற வசதிகளை ஏற்படுத்த வேண்டும். நீச்சல் பயிற்சியும் மாணவர்களுக்கு அத்தியாவசியம். அந்த வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுப்பது மிகவும் நன்று. மாணவர்களை சிறந்த குடிமகனாக்குவதே கல்வியின் நோக்கமாகும். தான் பிறந்த வீட்டிற்கும், நாட்டிற்கும், பெருமை சேர்த்து தாம் பிறந்த நாட்டை நேசிக்கும் மைந்தனாக உருவாக்குவதே கல்வியின் முழுமையான நோக்கமாக இருக்க வேண்டும்.

## அறிவுத்தேடல், ஆராய்ச்சி செய்தல்

ஒரு விடயத்தை எடுத்து அதைப்பற்றி ஆய்வு செய்து, பல தடயங்களைச் சேர்த்து அதைப்பூரணமாக்கும் செயல் திட்டத்தை மாணவர் அறியும்படி போதித்து அதை

நடைமுறையில் பயிற்றுவிப்பது மிகமுக்கியம். மேல் வகுப்புக்களிலும், சர்வ கலாசாலையிலும் இப்படியான பயிற்சி மிக்க பயனளிக்கும். அறிவு தேடற்பயிற்சி 14 வயதில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இந்தக் கடினமான பணியில் செயற்படுகின்ற பெரும் பொறுப்பு ஆசிரியர்களையே சார்கின்றது. மாணவர்களின் மனதில் ஆசிரியர்களின் முன் மாதிரி பதிய வேண்டும். ஆசிரியர் அவர்களுக்குக் கதாநாயகனாகத் தோன்ற வேண்டும். அப்பொழுதான் ஆசிரியர்களோடு மாணவர்களுக்கு ஒரு ஈடுபாடு ஏற்படும். ஆசிரியர்கள் சலிப்பு ஏற்படாத உணர்வுகளோடும், ஊக்கத்தோடும் மாணவர்களை உற்சாகப்படுத்தி, அவர்கள் கடினமாகவும் தொடர்ச்சியாகவும் உழைப்பதற்கு உந்து சக்தியாக அமைய வேண்டும். சில பிள்ளைகளுக்கு ஏற்படும் தனிப்பட்ட பிரச்சினைகளைச் செவிமடுத்து ஆசிரியர்கள் தீர்ப்பதன் மூலம் மாணவர் - ஆசிரியர், சௌஜன்ய உறவை ஏற்படுத்தலாம்.

## மாற்றம் மாறாதது

மாற்றம் ஒன்று தான் என்றும் மாறாதது. அந்த அடிப்படையில் மனித சமூகம் இன்று பல மாற்றங்களுக்கு முகம் கொடுக்கின்றது. இந்த நிலையில் ஒரு பாடசாலையில் மாணவர்களை வழிநடத்துகின்ற பெரும் பொறுப்பு ஆசிரியர்களின் கையிலேயே உள்ளது. மாணவர்கள் அடைகின்ற சிறு வெற்றிகளைக் கூட பாராட்டி ஊக்குவிக்க வேண்டும். ஆசிரியர்களும் பெற்றோரும் பிள்ளைகளை ஊக்குவிக்கின்றபோது தான் மாணவர்கள் கல்வி கற்று பாடசாலையை விட்டு வெளியேறும்போது நம்பிக்கையுடன் தங்கள் பயணத்தைத் தொடரமுடியும். அப்போது தான் சிந்தனைத்திறனும், சமூகத்திறனும், சுயதிறனும், ஒன்றிணைந்தவர்களாக மாணவர்களால் பரிணமிக்க முடியும்.

இறுதியாக, எனது 10 வது வயதில் இருந்து பல்கலைக்கழகம் வரை கல்வி பயின்ற நினைவுகள் நன்றிப் பெருக்கோடு நெஞ்சத்தில் நிறைவாக வாழ்கின்றன. நான் கல்வி கற்ற இந்தக் கல்லூரியின் வளர்ச்சியில் பங்கெடுத்து, அதன்

வளர்ச்சியில் பூரித்து மகிழும் என்னை, அதே பாடசாலையில் மிக உயர்ந்த நிகழ்வாக நிகழும் நிறுவனர் நினைவு நாளிலும் பரிசளிப்பு விழாவிலும் விருந்தினராக அழைத்திருப்பதை இட்டு பெருமையாகக் கருதுவதோடு, இந்த வாய்ப்பை எனக்கு அளித்த கல்லூரியின் அதிபருக்கும், இவ்விழாவை ஏற்பாடு செய்த செயற்பாட்டுக்குக் குழுவினருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொண்டு விடைபெறுகின்றேன்.

"வெல்லுக மகாஜன மாதா"